# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பற்றுகள் வரி (நீக்குதல்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 2.50** **தபாற் செலவு : ரூபா 5.00**

## ***2011 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பற்றுகள் வரி (நீக்குதல்) சட்டம்***

*[2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.- ஓ. 18/2011*

### ***2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுகள் வரிச் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பற்றுகள் வரி (நீக்குதல்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.*

*நீக்கமும், பேணல்களும்.*

***2.*** *(1) 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டம் 2011, மாச்சு 31 ஆம் தேதியிலிருந்து இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் (3) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பில் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும்.*

*(3) 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுகள் வரிச் சட்டம் 2011, மாச்சு 31 ஆம் தேதியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும் -*

*(அ) நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து பயனுறுவதாக (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தினத்திற்கு உடன்முந்திய தினம் வரை விதிப்பனவு செய்யப்பட்ட பற்றுகள் வரி நீக்கம்செய்யப்பட்ட சட்டத்தின் 5 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியாலும் அல்லது விசேட வங்கியாலும் அல்லது ஒவ்வொரு நிதிநிறுவனத்தாலும் சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பற்றுகள் வரியாக அவ்வாறு அறவிடப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நீக்கம்செய்யப்பட்ட சட்டத்தின் 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதலும் வேண்டும் ; அத்துடன்*

2-PL 005610 - 1,090 (2011/03)

(ஆ) 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அது நீக்கம் செய்யப் படுவதற்குமுன்னர் கோப்பிடப்பட்ட வழக்கு, வழக்கு நடவடிக்கை அல்லது கருமம் எதுவும், அத்தகைய நீக்கம் எவ்வாறிருப்பினும் 2011 ஏப்பிறல் 1 ஆம் திகதி யிலிருந்து அவை முடிவடையும் வரை தொடரப்படுதல் வேண்டும்.

ஆயின், 1 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதியானது நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் கோப்பிடப்பட்டதும் மூன்று ஆண்டுகளைக்கொண்ட அத்தகைய காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு முடிவுறாதிருக்கின்றதுமான ஏதேனும் வழக்கு, வழக்கு நடவடிக்கை அல்லது கருமம் தொடர்பில் ஏற்புடையதாதலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*